ஓய
7-8-25

திருவாரூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின்(பொ) செயல்முறைகள்

பிறப்பிப்பவர்: திரு. இரா. சௌந்திரராஜன் எம்.எஸ்ஸி., பி.எட்., எம்.பில்.,

ப.மு.எண்:3266/அ1/2025 நாள்: .07.2025

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி - பள்ளிக்கல்வித்துறை - பணிவரன்முறை - திருவாரூர் மாவட்டம் - இராதாநரசிம்மபுரம், அரசு மேல்நிலைப் பள்ளி இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.இரா.முருகன் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண் 151 பள்ளிக்கல்வித்துறை நாள் 09.09.2022
2. திருவாரூர் முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்:9904/அ1/2018 நாள்: 22.12.2023
3. திருவாரூர் மாவட்டக்கல்வி அலுவலரின் (இடைநிலை) ந.க.எண்:3136/அ1/2025 நாள்:02.05.2025

---------------------

திருவாரூர் மாவட்டம் இராதாநரசிம்மபுரம், அரசு மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.இரா.முருகன் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்க கோரி பார்வை(3)-இல் குறிப்பிட்டுள்ள கடிதங்களின்படி கருத்துருக்கள் பெறப்பட்டுள்ளது.

மேற்படி, பணியாளர் பதவி உயர்வு மூலம் பார்வை(2)-இல் காணும் செயல்முறைகளின்படி, இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டு 26.12.2023 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

மேற்படி, பணியாளருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்யும் பொருட்டு பார்வை(1)-இல் காணும் அரசாணையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையிலும் தனியரது இடைநிலைக்கல்வி சான்றிதழ்களின் உண்மைத் தன்மை அறிந்து அறிக்கையின் அடிப்படையிலும் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையிலும் கீழ்க்காணும் பணியாளருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் சேர்ந்த நாளான 26.12.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ.எண். | பெயர் பதவி மற்றும் பள்ளியின் பெயர் | நியமன முறை | இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் பெற்ற நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | திரு.இரா.முருகன், இளநிலை உதவியாளர், அரசு மேல்நிலைப் பள்ளி, இராதாநரசிம்மபுரம், திருவாரூர் மாவட்டம். | பதவி உயர்வு | 26.12.2023 முற்பகல் | 26.12.2023 முற்பகல் |

நிபந்தனைகள்

1. இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர் மூன்றாண்டு பணிக்காலத்திற்குள் இரண்டாண்டுகள் பூர்த்தி செய்த பின்னரே இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கப்படும்.
2. தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் மற்றும பவானி சாகர் அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும்.
3. இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் வழங்க இயலும்.
4. இது குறித்து அன்னார் பணிப்பதிவேட்டில் தக்கப் பதிவுகள் மேற்கொள்ள வேண்டும்.

இணைப்பு : பணிப்பதிவேடு அசல்

24-1-24

முதன்மைக்கல்வி அலுவலர்(பொ),
திருவாரூர்.

பெறுநர்
திரு.இரா.முருகன்,
இளநிலை உதவியாளர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, இராதாநரசிம்மபுரம்,
திருவாரூர் மாவட்டம்(உரிய வழியாக).

நகல்

1. தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, இராதாநரசிம்மபுரம், திருவாரூர் மாவட்டம்.
2. மாவட்டக்கல்வி அலுவலர்(இடைநிலை), திருவாரூர் மாவட்டம்.